

# 22.05.2026 செய்திகள்

## ஈரான் போர் : இந்தியா பெற்றதும் இழந்ததும்

- ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் பிப்ரவரி 28ஆம் தேதி நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து மேற்காசியப் பிராந்தியத்தில் தொடங்கிய பதற்றம் இன்றுவரை முழுமையாகத் தணியவில்லை. பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதல், ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாடு என உலகத்தின் பல்வேறு மூலைகளில் இதன் தாக்கம் எதிரொலிக்கிறது. இந்தச் சூழலில், இந்தியாவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனோடு மேற்கொண்ட நேர்காணல்:

» மேற்காசிய நாடுகளுடனான இந்தியாவின் உறவு எப்படிப்பட்டது?

- மேற்காசியாவில் இந்தியா எப்போதும் செல்வாக்கு மிக்க முக்கிய நாடாகவே இருந்து வந்துள்ளது. கடந்த காலத்தில், இந்நாடுகளின் பல்வேறு தலைவர்களுடன் இந்தியாவின் உயர்நிலைத் தலைவர்கள் தொடர்ச்சியாகத் தொடர்பில் இருந்தது, இந்தியாவின் செல்வாக்கு வலுவடையக் காரணமாக இருந்தது. பெரும்பாலான மேற்காசிய நாடுகள் பாரம்பரிய முடியாட்சிகளால் நிர்வகிக்கப்பட்ட காலக்கட்டத்திலும், இந்தியா போன்றதொரு ஜனநாயக நாடு என்றைக்கும் அவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கியது எனலாம்.
- நம் நாட்டின் ஜனநாயக மரபுகள், மேற்காசிய முடியாட்சிகளுக்கு அச்சுறுத்தலாகத் தோன்றவில்லை என்பது இதில் கவனிக்கப்பட வேண்டும். மேற்காசியப் பிராந்திய மக்களுக்கு அது ஓர் ஊக்கமாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும் எப்போதும் இருந்து வந்துள்ளது. ஆனால், அண்மைக் காலமாகப் பொருளாதாரரீதியாக இந்தியா பெரிதும் வலுவடைந்திருந்தாலும், மேற்காசிய நாடுகளுடனான நட்புறவை மேம்படுத்துவதில் முன்பு இருந்ததைவிட மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறேன்.

» மேற்காசியப் போர் இந்தியர்களின் அன்றாட வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

- தற்போது நடந்துகொண்டிருக்கும் மோதலைப் பொறுத்தவரை, இந்தியா எந்த நிலைப்பாட்டில் உள்ளது என்பதில் தெளிவு இல்லை. மேற்காசிய நாடுகளில் நடைபெற்றுள்ள முந்தைய போர்களின்போது இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவாக, வலுவாக முன்வைத்தது.
- ஆனால் இன்றைய சூழலில், இந்தியா நடுநிலையாக இருக்கவே முயல்கிறது. தனது நிலைப்பாட்டில் தெளிவாக இருந்து அச்சமின்றிக் குரல் எழுப்பிய நாடு என்கிற இந்தியாவின் பழைய மதிப்புக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றே நினைக்கிறேன். இந்தியா பொருளாதாரரீதியாக வளம்பெற்று வலுவான நாடாக மாறியுள்ள நிலையில், போர் ஏற்படுத்தும் பொருளாதாரச் செலவு, அதன் தாக்கம் குறித்து அதிகக் கவனத்துடன் நடந்துகொள்கிறது. தனது பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்தியா முக்கியத்துவம் அளிப்பதைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது.
- போரால் ஏற்படும் தாக்கத்தைக் கட்டுக்குள் வைக்கவே இந்தியா முயல்கிறது. என்கிறபோதும், இந்திய மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதை மறுக்க முடியாது. எரிபொருள் விலை உயர்வு, வேலைவாய்ப்பில் ஏற்படும் தாக்கம், பொருளாதார அழுத்தங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

» இந்தப் போர் இன்னமும் முடிவுக்கு வராமல் நீள்கிறது. அதற்கான முக்கியக் காரணங்கள் என்ன?

- ஈரானுக்கு எதிரான போரைத் தொடங்கிவிட்டால், மிகக் குறுகிய காலத்திலேயே அந்நாட்டை முறியடித்துவிடலாம் என அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டணியும் சில மேற்கத்திய நாடுகளும் கணித்தன. ஆனால், அது மிகத் தவறான கணிப்பு.
- ஈரானின் தொன்மையான நாகரிகப் பின்னணி. அதனுடன் இணைந்துள்ள ஷியா கொள்கை சார்ந்த மனப்பாங்கு போன்றவை இப்போரில் பெரும் பங்காற்றுகின்றன. எதிரி நாட்டிடம் சரணடைவதைவிட அழுத்தத்தையும் பாதிப்புகளையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கும் மனநிலையை ஈரான் வலுவாகக் கடைப்பிடிக்கிறது. அமெரிக்க – இஸ்ரேல் நாடுகள் இதனைப் புரிந்துகொள்ளத் தவறுகின்றன.

SURESH

- புரிந்துகொள்வது என்பதைவிட – ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுவதால் காலவரையின்றித் தொடரும் நிலைக்கு இந்தப் போர் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலை இப்படியே தொடர்ந்தால் தற்காலத்தின் மிகப் பெரிய துயரங்களில் ஒன்றாக இது மாறக்கூடும்.

» பொருளாதாரத் தாக்கம், போர் சார்ந்த நிலைப்பாடு, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் பாதுகாப்பு – இந்தப் பிரச்சினைகளை இந்தியா எப்படிக் கையாள வேண்டும்?

- மூன்று பிரச்சினைகளின்மீதும் இந்தியா உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். எந்தப் பக்கமும் சாயாமல் இருப்பதால் இதுவரை குறிப்பிடத்தக்க பலன்கள் எதுவும் இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை என நினைக்கிறேன். முன்பு இருந்த நிலைப்பாட்டை இந்தியா மீண்டும் எடுக்குமா என்பது சந்தேகமே. ஆனால், தற்போது எடுத்துள்ள நிலைப்பாட்டால் ஏற்கெனவே உள்ள சூழலைச் சிக்கலாக்காமல் இருப்பதில் கவனம் தேவை. சில நேரம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதே மிகச் சிறந்த நடவடிக்கையாக இருக்கும்.

» தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தும் இக்காலப் போர்களில் செயற்கை நுண்ணறிவின் (ஏ.ஐ) பங்கு எப்படி இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?

- இந்தக் கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் அளிக்க முடியாது. தனித் தலைப்பாக இன்னும் விரிவாகப் பேச வேண்டிய முக்கிய விஷயம் இது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் எந்தப் போரிலும் பெரிய மாற்றங்களை நிகழ்த்தக்கூடிய கருவியாகச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மாறியுள்ளது எனலாம்.
- கண்காணிப்பு, இலக்கு நிர்ணயம், தகவல் தொடர்பு, போர்த் தந்திரம் உள்ளிட்ட பல துறைகளில் ஊடுருவும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், போர்க்களத்தில் உலகப் போரிலும், அதற்குப் பிறகு நடத்தப்பட்ட பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இரண்டாம் உலகப் போரிலும், அதற்குப் பிறகு நடத்தப்பட்ட போர்களிலும் டாங்குகள், போர் விமானங்கள் ஏற்படுத்திய தாக்கத்தைவிடவும் அதிகமாக, நவீனப் போர்முறைகளை அடிப்படையிலேயே மாற்றும் ஆற்றல் செயற்கை நுண்ணறிவுக்கு உள்ளது.

## கரப்பான் பூச்சி ஜனதா கட்சி

- போலி சான்றிதழ் தொடர்பான ஒரு வழக்கை அண்மையில் விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் கூறும்போது, "வேலை இல்லாமல் எந்த தொழிலும் செய்ய தகுதியற்ற சில இளைஞர்கள் கரப்பான்பூச்சிகளை போல, ஒட்டுண்ணிகளைப் போல சமூக வலைதளங்களில் எல்லோரையும் தாக்கத் தொடங்குகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.
- இதுதொடர்பாக பின்னர் விளக்கம் அளித்த நீதிபதி சூர் காந்த், "போலி சான்றிதழ் வைத்திருப்பவர்களை மட்டுமே குறிப்பிட்டேன். ஒட்டுமொத்த இளைஞர்களை அல்ல" என்று தெரிவித்தார்.
- இந்த சூழலில் அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக்கழகத் தில் பயிலும் இந்திய இந்திய மாணவர் அப்ஜித் தீப்கே என்பவர் கடந்த 16-ம் தேதி இன்ஸ்டா கிராமில், "காக்ரோச் ஜனதா கட்சி' (கரப்பான் பூச்சி ஜனதா கட்சி) என்ற பக்கத்தை தொடங்கினார். எக்ஸ், பேஸ்புக் உள்ளிட்ட இதர சமூக வலைதளங்களிலும் இதே பெயரில் கணக்குகள் தொடங்கப்பட்டன.
- கரப்பான் பூச்சி கட்சியில் இணைய வேலைவாய்ப்பற்றவராக இருக்க வேண்டும். சோம்பேறியாக இருக்க வேண்டும். ஆன்லைனுக்கு அடிமையாக இருக்க வேண்டும். கோபத்தை அழகாக வெளிப்படுத்த தெரிந்தவராக இருக்க வேண்டும் என்று அப்ஜித் கூறியுள்ளார்..
- மேலும், ஒரு கட்சியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட எம்.பி., எம்எல்ஏக்கள் தேர்தலுக்குப் பிறகு அணி மாறினால் அடுத்த 20 ஆண்டுகள் அவர்கள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படும் என்பது உட்பட அப்ஜித் 5 வாக்குறுதி அளித்துள்ளார்.
- கரப்பான் பூச்சி கட்சியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தை 1.5 கோடி பேர் பின்தொடர்கின்றனர். எக்ஸ், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களிலும் கரப்பான்பூச்சி கட்சி பக்கங்களை பின்தொடர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
- இந்நிலையில், அந்தக் கட்சியின் எக்ஸ் சமூக வலைதள பக்கம் நேற்று இந்தியாவில் முடக்கப்பட்டது. அடுத்த சில மணி நேரங்களில் கரப்பான் பூச்சிகள் ஒருபோதும் உயிரிழப்பது இல்லை என்ற வாசகத்துடன் காக்ரோச் இஸ் பேக் (கரப்பான் பூச்சி திரும்பி விட்டது) என்ற பெயரில் எக்ஸ் தளத்தில் புதிய பக்கம் தொடங்கப்பட்டது.
- இதனிடையே கரப்பான்பூச்சி கட்சியை போன்று ஜென் ஸி இளைஞர்கள் சார்பில் தேசிய ஒட்டுண்ணி முன்னணி என்ற பெயரில் புதிய ஆன்லைன் கட்சி தொடங்கப்பட்டு உள்ளது.